## வரைவுசெய்திவெளியீடு

## திருவாரூர் மாவட்டத்தில் மின் ஆளுமை சங்க மின் மாவட்ட மேலாளர் பணிக்கு விண்ணப்பிக்க அழைப்பு

மாவட்டமின் ஆளுமை சங்கத்தின் மின் மாவட்ட மேலாளர் (**e-District Manager**) பணியிடத்திற்கு திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியுடையவர்கள் வரும் நவம்பர் 11ம் தேதிக்குள் விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்படுகிறது.

திருவாரூர் மாவட்ட மின் ஆளுமைச் சங்கத்தின் மின் மாவட்ட மேலாளர் பணியிடத்திற்கு ஆர்வமிக்க தகுதி வாய்ந்த இளைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. பி.இ.,பிடெக்., (கணினி அறிவியல், கணினி அறிவியல் பொறியியல், தகவல் தொழில் நுட்பவியல்) அல்லது இளநிலைபட்டம் மற்றும் எம்சிஏ, எம்.எஸ்.சி., (கணினி அறிவியல், தகவல் தொழில் நுட்பம், மென்பொருள் பொறியியல்) பட்டதாரிகள் மட்டும் விண்ணப்பிக்கலாம். இதர பொறியியல் பட்டதாரிகள் இப்பணிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் அல்ல.

விண்ணப்பதாரர்கள் பத்தாம் வகுப்பு,பிளஸ் 2 மற்றும் இளநிலை/முதுகலைபட்டம் ஆகிய அனைத்து நிலைகளிலும் குறைந்தபட்சம் 60 சதவிகிதம் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். 01.07.2014 அன்றைய தேதியில் வயது 21 முதல் 35 வயதிற்குள் இருக்கவேண்டும். மாதம் ஒன்றுக்கு ரூ.23,500/-ம் ஆண்டுக்கு 10% கூடுதலாக உதவித்தொகையும் ஒவ்வொரு ஆண்டும் கணக்கிடப்படும்.

ஓராண்டுகாலம் வேலையை ஆய்வுசெய்து கூடுதலாக 2 ஆண்டுகாலம் மட்டும் நீட்டிக்கப்படும். கல்வி மற்றும் ஆன்லைன் தேர்வின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். தேர்வு செய்யப்படுபவர்கள் திருவாரூரில் பணியாற்ற வேண்டும். நியமனம் முழுவதும் ஒப்பந்த அடிப்படையிலானது. மின் ஆளுமை பயிற்றுவிப்பு திட்டத்தில் நியமிக்கப்படும் நபர் பணிக்கொடை, சேமநிதி, ஓய்வூதியம் போன்ற கொடைகளுக்கு தகுதியுடையவர் ஆகமாட்டார். மேலும் விபரங்களுக்கு மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிவிப்பை மாவட்ட இணையதள முகவரியான **www.tiruvarur.nic.in<http://www.tiruvarur.tn.nic.in>**ல் தெரிந்து கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை அஞ்சல் மூலமாகவோ, நேரடியாகவோ வருகிற நவம்பர் மாதம் 11ம் தேதிமாலை 5.45 மணிக்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று திருவாரூர் மாவட்ட ஆட்சியர் முனைவர். மா. மதிவாணன் அவர்கள் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சியர்,
திருவாரூர்